



திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், 2வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறவிருக்கிறது. இளைஞர் அணி வரலாற்றில் இடம்பெறவுள்ள சேலம் மாநாட்டின் ஆக்கப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, ஆவடியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் நாடு போற்றும் முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை, நாளேடு மூலம் அவதூறு செய்யும் சனாதன சக்திகளை வீழ்த்துவோம் என எடுத்துரைத்தும், கழகத்தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று மாநாட்டை வெற்றி பெறச்செய்வோம் என வாக்குறுதி அளித்த இளைஞரணி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் எம்.எம்.ஏ., திருத்தணி சந்திரன் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு

# மனிதாபிமான அடிப்படையில் பதிலளித்து உதவிடுவீர்!

## ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி அதிகாரிகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

திருவள்ளூர், செப். 2 -

பொதுமக்கள் தரும் கோரிக்கை மனுக்களுக்கு மனிதாபிமானத்துடன் பதிலளித்து அவர்களுக்கு அதிகாரிகள் உதவிட வேண்டும் என்று, ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நேற்று முன்தினம் (31.08.2023) பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட ரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு துறைகள் சார்பாக 912 பயனாளிகளுக்கு ரூ.35.83 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:

இந்த ஆய்வுக்கூடத்தை பொறுத்தவரை, முதல்வரின் முகவரியில் தரப்படும் மனுக்களுக்கு தரமான பதில்கள் தருவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மக்கள் தங்கள் கோரிக்கைகளை குறைகளை மனுக்கள் மூலமாகத்தான் தெரிவிப்பார்கள். இந்த மனுக்களின் மீது குறித்த காலத்திற்குள் பதில் அளிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மனுக்களுக்கு பதில் தந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் இல்லாமல் உங்கள் துறைக்கானது அல்ல என்று தெரிந்தாலும். அந்த நபருக்கு வேறு ஏதேனும் வகையிலாவது உதவலாம் என்று மனிதாபிமானத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஏழை எளிய மக்கள், மாற்றுத் திறனாளிகள் பெண்கள் ஆகியோர் தரும் மனுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் அளிக்குமாறும் உதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

### உழவர் சந்தைகள்

ஏழை எளிய மக்கள் தரும் மனுக்களை வெறும் தாளாக பார்க்காமல் அவர்களுடைய வாழ்க்கையாக பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி தெரிவிப்பார்கள்.

உழவர் சந்தையை பொறுத்தவரை இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகள் முழுமையாக பயன்படும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் தான் இந்த உழவர் சந்தை திட்டம். உழவர் சந்தை திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்னும் வேகமாக உருவெடுத்து செயல்பட வேண்டும். உழவர் சந்தைக்களுக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்தி தந்தால் விவசாயிகளும் மக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள். அதேபோல் கும்மிடிப்பூண்டியிலும் உழவர் சந்தை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து அங்கு உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டும். அலுவலர்கள் தங்கள் துறைக்கு தேவையான இடம் தேர்வு செய்ய செல்லும் பொழுது மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்விக்கும் மருத்துவத்திற்கும் தான் அதிக முக்கியத்துவம் தந்து திட்டங்களை தீட்டி வருகிறது. அதிலும் குறிப்பாக, பள்ளி கல்விக்கு அதிக நிதி ஒதுக்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள் தான். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உட்பட பல்வேறு முற்போக்கு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிக்கல்வியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே அரசு திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவ மாணவியர்களை பள்ளி கல்லூரிக்கு அழைத்து வருவது நம்முடைய பொறுப்பு என்பது உணர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நல்ல அனுபவம் உள்ளவர்கள் சிறப்பாக செயல்பட கூடியவர்கள் மக்களோடு நேரடி தொடர்பில் இருப்பவர்கள். எனவே அவர்கள் தரும் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் தந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### கால நிர்ணயம்!

பேருந்து நிலையம், சாலைகள் என ஒவ்வொரு அரசு திட்ட பணிகளும் எப்பொழுது முடிக்க முடியும் என்று அந்தந்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் இன்று தெரிவித்துள்ளீர்கள். பணிகளை விரைந்து நிறைவு செய்வது எப்பொழுது என்பது குறித்த காலத்தையும் நீங்களே நிர்ணயித்து உள்ளீர்கள். நீங்கள் இந்த காலகட்டத்திற்குள் முடிப்பதாக சொன்ன நாட்களை நான் குறித்து வைத்துள்ளேன். மாவட்ட ஆட்சியர் அவர்களோடு நீங்கள் ஒன்றிணைந்து இந்த குறிப்பிட்ட நாட்களுக்குள் பணிகளை நிறைவு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதில் சிறப்பாக செயல்படும் மாவட்டத்திற்கு பாராட்டுக்களும் தொய்வு ஏற்படும் மாவட்டங்களில் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது உங்களுக்கு நன்றாக தெரியும். ஆதலால் அதனை நன்குணர்ந்து நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இன்றைய ஆய்வின் அறிக்கை முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு மிகச் சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆனால், அந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசுக்கு நற்பெயர் பெற்று தரும்படி அரசு அலுவலக உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாய்வு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், கரிகலவாக்கம் பகுதியில் நேற்று முன்தினம் (31.08.2023) தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் சார்பாக சென்னை எல்லை சாலை திட்டத்தின் கீழ் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழி சாலை (பிரிவு2) வரை ரூ1,540 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலை பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, இச்சாலை பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் , ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் கே.சங்கர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன்,திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீபாஸ் கல்யாண், முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), சுதர்சனம் (மாதவரம்), டி.ஜெ. கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி)

மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஓ. சுகபுத்ரா, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ், சார் ஆட்சியர் (பொன்னேரி) செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன், ஆவடி துணை காவல் ஆணையர் திருமதி.ஜெயலட்சுமி, தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக தலைமை பொறியாளர் டி. இளங்கோ, கண்காணிப்பு பொறியாளர் ஜி.தட்சிணாமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


